**ARTICLE 04 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00018**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 15–19
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# தொ. பா -வின் பண்பாட்டுப் பதிவில் மஞ்சள்

**முனைவர் . வைடூரியம்மாள் பா[1,*]**

[1]உதவிப்பேராசிரியர் ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி, India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர் . வைடூரியம்மாள் பா — bvaiduma@gmail.com
**ORCID:** முனைவர் . வைடூரியம்மாள் பா https://orcid.org/0000-0002-9400-2765

## Abstract

Tho. Paramasivan—known simply by the initials “Tho. Pa.”—was a scholar who conducted extensive research into Tamil cultural history and folk deities, bringing them to the attention of the wider world. He was a remarkable figure who chronicled history from the perspective of the common people and articulated Dravidian culture and the shared customs of South India with great simplicity. It is no exaggeration to call him a “cultural repository,” for his writings encompassed not merely twenty books, but the entire span of two millennia of Tamil life. While many professors focused on the history of the Chola dynasty, he was the one who sought out the history of *soru* (cooked rice). He explained how we often unknowingly follow certain practices, yet consciously erode our own culture. This article explores his insights regarding the significance of turmeric within our cultural traditions.

## ஆய்வுச் சுருக்கம்

தமிழகத்தின் பண்பாட்டு வரலாறு ஆய்வுகளிலும் நாட்டார் தெய்வங்கள் பற்றி பல்வேறு ஆய்வுகளை நடத்தி அதை வெளி உலகிற்கு பறைசாற்றியவர் தொ.ப என்ற இரண்டு எழுத்திற்குச் சொந்தக்காரரான தொ.பரமசிவன். வரலாறுகளை மக்களின் கண்ணோட்டத்தில் எழுதிய மகத்தான மனிதர். திராவிடப் பண்பாட்டை தென்னிந்தியாவின் பொதுமையான பழக்கவழக்கங்களை எளிமையாக எடுத்துச் சொன்னவர். இவரை பண்பாட்டுக் களஞ்சியம் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் அவர் எழுதியது 20 புத்தகங்கள் அல்ல. 2000 ஆண்டு தமிழர் வாழ்வை. பேராசிரியர்கள் பலர் சோழர் வரலாற்றைத் தேடினார்கள். இவர் மட்டுமே சோற்றின் வரலாற்றைத் தேடியவர். நாம் அறியாமலே பலவற்றை பின்பற்றுகிறோம். ஆனால் தெரிந்தே நம் பண்பாட்டை சிதைக்கிறோம் எப்படி என்ற விளக்கத்தை தந்தவர். இவரின் பண்பாட்டுப் பதிவில் மஞ்சள் பெறும் இடம் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** Manjal Neerattu (Turmeric Bath); Puberty Ritual; Mother Goddess Worship; Women Culture; Antiseptic; Medicinal Value; Auspiciousness; Naming Tradition; Cultural Anthropology; Oral History; Sanskritisation

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பா, மு. . வை. (2026). தொ. பா -வின் பண்பாட்டுப் பதிவில் மஞ்சள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தமிழ் பண்பாட்டிற்கு ஆயிரம் பக்கங்களில் விளக்கம் எழுதிக் கொண்டிருந்த அறிஞர்கள் இடையே இரண்டு பக்கங்களில் நாம் ஒரு பொருட்டாகவும் கருதாத உப்பு, எண்ணை, தேங்காய், உடை, உணவு முறை, உறவுமுறைப் பெயர்கள், தாலி, மஞ்சள் முதலானவற்றைக் கொண்டு 2000 ஆண்டுகால தமிழரின் பண்பாட்டு அடையாளத்தை அர்த்தப்படுத்தியவர் பண்பாட்டு ஆய்வாளர் தொ பரமசிவன் அவர்கள். அதில் மஞ்சள் பண்பாட்டை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## பண்பாட்டு விளக்கம்

மனிதனை பண்பட்டவனாக காட்டுவது பண்பாடாகும் பண்பாட்டை கொண்டே சமுதாய நிலை தீர்மானிக்கப்படுகிறது "**பண்பாடு என்பது சமுதாயத்தில் உறுப்பினராக இருந்து மனிதன் பெற்றிடும் அறிவு கலை நீதி நம்பிக்கை மதிப்பு சட்டம் சம்பிரதாயங்கள் மொழி இன்ன பிற ஆற்றல்கள் ஆகியவற்றை கொண்ட முழுமையாகும்**" என இபி டெய்லர் குறிப்பிடுகிறார். பண்பாடு நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்தது அது நமது மூச்சுக்காற்றை போல இதனை சதர்லேண்ட் பின்வருமாறு கூறுகிறார் "**ஒரு தலைமுறை மக்கள் தங்களது அடுத்த தலைமுறையினருக்கு வழங்கக்கூடிய அனைத்தும் பண்பாட்டில் அடங்கும் மக்களின் பண்பாடு என்பது அவர்களின் சமூக பாரம்பரியத்தை குறிக்கிறது" என்கிறார்.**

"**பண்பாட்டு வளர்ச்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் தன் பங்கினை அளித்தாலும் அது தனி மனித சொற்கள் என்று சமுதாய சாதனை அது உருவாகுவதும் வளர்ச்சி பெறுவதும் ஒரு சமுதாயத்தில் தான் என்பதை மறந்து விடக்கூடாது ஒரு சமுதாயம் எந்த உயர்ந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுகிறதோ அவற்றினை பண்பாடு தன்னுள் பெற்று மிளிருகிறது**" என ஆர் பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

தொன்மை அல்லது பழமை என்பது சுவைக்கு உதவாதது அப்பாவித்தனமானது மூடநம்பிக்கை கொண்டது. மாறிவரும் உலகத்தை பார்க்க மறுப்பது என்பது சமூக உளவியல் ரீதியான கருத்து. இதிலிருந்து மாறுபட்ட கருத்தை உடையவர் தொ. பரமசிவன் அவர்கள். இவர் பண்பாட்டிற்கு புது விளக்கம் தருகிறார்.

பண்பாடு என்பது தொன்மையான மற்றும் உயிர் திறல்களின் காலம் சார்ந்த அசைவுகளின் வெளிப்பாடு. "**உயிர்த்திறல் என்றால் அருகம்புல்லும் மூங்கில் தூறும் ஆழ மரமும் நமக்கு காட்டுகின்ற வெளிப்பாடுகள் என்கிறார் புதர் என்பதன் முந்திய வடிவமான அருகம்புல் தூறு என்பதனை வெளிக்காட்டும் மூங்கில் விழுதுகளாக வெளியினை நிரப்பும் ஆலமரம் என்பவை தொன்மையும் பண்பாடும் என்ன என்று உணர்த்துபவை என விளக்கம் தருகிறார்**" (தொ. பரமசிவன், மஞ்சள் மகிமை, ப. 12) அவ்வகையில் மஞ்சள் பண்பாடு குறித்து மஞ்சள் மகிமை என்ற தனி நூலையே எழுதியிருக்கிறார்.

மஞ்சள் என்பது வெறும் மூலிகை அல்ல அது ஒரு பண்பாட்டுக் குறியீடு தமிழரின் பழக்க வழக்கங்கள் சடங்குகள் விழாக்கள் முதலியவற்றில் பொருள் பொதிந்த பண்பாட்டை புலப்படுத்தி நிற்பது. சோபாவின் மஞ்சள் பண்பாட்டுச் செய்திகள் அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது.

## விறலி மஞ்சள்

பூசு மஞ்சள் புகழ்பெற்றது விறலி மஞ்சள். விறல் என்றால் முகம். விறல் என்றால் முகபாவங்கள் காட்டி நடித்து நடனமாடும் பெண். அன்று கூத்தாடி பெண்கள் விளக்கு ஒளியில் நாட்டியமாடும்போது அவர்களின் முகம் துடிப்பாகத் தெரிய வேண்டும் என்பதற்காக மஞ்சள் அரைத்து முகத்தில் பூசிக் கொண்டனர். காலம் செல்லச் செல்ல குடும்பப் பெண்களும் பூச

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

தொடங்கினர். விறலியை மதிக்காத சமூகம் விறலி மஞ்சள் மட்டும் கொண்டாடத் தொடங்கியது இன்றும் கொண்டாடி வருகிறது பெரும்பாலும் பெண்கள் அன்றைய காலத்தில் மஞ்சள் மட்டுமே தேய்த்துக் குளிப்பதனையே வழக்கமாகக் கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது கிருமிக் கொள்ளியாக அறியப்பட்ட மஞ்சளும் வேப்பிலையும் தமிழர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் வழி அறிய முடிகிறது

## பெண்ணின் அடையாளமும் மங்கலமும்

தமிழர் பண்பாட்டில் பெண் மஞ்சள் பெண்ணோடு இணைந்தது மஞ்சள் பூசாத பெண் முகம் நெற்றி வெறுமையானது என்றே கருதப்பட்டது மஞ்சள் என்பது வெறும் அழகு சாதனம் அல்ல அது உயிர் காக்கும் கிருமி நாசினி என்பதை நம் மூதாதையர்கள் அறிந்திருந்தனர் இந்த அடிப்படையிலேயே பெண்ணின் மங்கள அடையாளமாக மஞ்சள் மாறி இருக்கிறது.

திருமணத்தில் மஞ்சள் கிழங்கு கட்டுதல், மஞ்சள் பூசி குளித்தல், மஞ்சள் தாலி, மஞ்சள் குங்குமம் ஆகியவை திராவிட பண்பாட்டின் தொடர்ச்சி. வடமொழிப் பண்பாட்டில் குங்குமத்திற்கு உள்ள இடத்தை விட தமிழகத்தில் மஞ்சளுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. தாலியின் மஞ்சள் கயிறு கூட ஆரியப்படுதலுக்கு முன்பு வெறும் மஞ்சள் நூல் தான் கட்டப்பட்டது. தாலி என்பது பெண்ணை கட்டும் சங்கிலி அல்ல மஞ்சள் கயிற்றால் பெண்ணை காக்கும் மருந்தாக பயன்படுத்தப்பட்டது என்ற பண்பாட்டுப் பதிவை தோப்பா முன் வைக்கிறார்

## மஞ்சள் நீராட்டு

பூப்பெய்துதல் என்றால் பூப்பது போல மலர்வது. ஒரு செடி பூத்தால் எப்படி கொண்டாடுவோமோ அப்படி பெண் பூத்ததை கொண்டாடுவது தமிழ் மரபு. இதை தீட்டு என்று சொன்னது பிற்கால வருகை. சங்க இலக்கியத்தில் பூப்பெய்திய பெண்ணை பூப்பு நீராட்டு என்றே குறிப்பிடுகிறார்கள். பெண் பூப்பெய்திய பிறகு நடக்கும் மஞ்சள் நீராட்டு விழாவில் தான் அவளுக்கு பெரியவள் என்ற புதிய அடையாளப் பெயர் கிடைக்கிறது. மஞ்சள் நீராட்டு என்பது உடல் சடங்கு அல்ல. சமூக அங்கீகாரச் சடங்கு. அன்றுதான் அவள் திருமணத்திற்கு தயாரானவள் என்று ஊரால் அறியப்படுகிறது **“உதிரப்போக்கில் போது பெண்ணின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் மஞ்சள் அவளை கிருமியிலிருந்து காக்கும் இயற்கை கவசம் அதனால் தான் மஞ்சள் நீராட்டு என்று அழைக்கப்படுகிறது”.**

முன்பு மஞ்சள் நீராட்டு என்பது பெண்ணுக்கு கல்வி தரும் சடங்காக இருந்தது. இன்று அது பெண்ணை விளம்பரப்படுத்தும் சடங்காக மாறிவிட்டது. மண்டப விழாவாக பணம் காட்டும் விழாவாக உருமாறி விட்டது. தமிழர் பண்பாட்டில் பெண் தீட்டு இல்லை அவள் தான் வீட்டின் மங்கலம் அந்த மங்களத்தின் நிறம் தான் மஞ்சள் என இப்பண்பாட்டை வலியுறுத்துகிறார் தொ. ப.

பழந்தமிழ் மரபில் மஞ்சள் நீராட்டு என்ற சொல் பூப்பு நீராட்டினை மட்டும் குறிப்பதன்று. போர்க்களம் செல்லும் வீரர்கள் மஞ்சள் நீராட்டு செய்து அல்லது மஞ்சள் உடை உடுத்தி செல்லு செல்லுவர். இது இறப்பினை எதிர்கொள்ளும் வீர உணர்வினையும் தியாக உணர்வுகளையும் குறித்து நிற்கிறது. இவ்வழக்கத்தின் தொல் எச்சம் ஆகவே அரக்கனை அழிக்கச் செல்லும் தாய் தெய்வத்தின் சாமியாடி

மஞ்சள் நீராடி மஞ்சள் உடை உடுத்தி செல்கிறார் என விளக்கம் கூறுகிறார் தொ.பா.

## பெயர் வைக்கும் பண்பாடு

பழந்தமிழர்கள் குழந்தைகளுக்கு அழகான பெயர்களை வைக்க மாட்டார்கள் வேண்டுமென்றே அசிங்கமான இழிவான பெயரை வைப்பார்கள் இதை மறைப்பெயர் என்கிறார் தொ. ப. மஞ்சள் என்பது அன்றாடம் கையில் படும் பொருள் அதனால் அதைப் பெயராக வைத்தால் தீய சக்தி அண்டாது என்பது தமிழர் நம்பிக்கை இதனை குழந்தை அழகாக இருந்தால் கண் பட்டுவிடும் என்று பச்ச, குப்பை கூலம், மஞ்சள் என்று பெயர் வைத்தார்கள் என்கிறார்.

மஞ்சம்மாள், மஞ்சளம்மாள், மஞ்சன், மஞ்சுநாதன் இவையெல்லாம் மஞ்சளிலிருந்து வந்த பெயர்கள். இவை தென் மாவட்ட வழக்கம் என்பதை அறிய முடிகிறது. மஞ்சள் என்ற பெயர் இன்று குறைந்துவிட்டது. மஞ்சுளா என்ற வடமொழி மயமாக்கப்பட்ட பெயர் நிறைந்திருக்கிறது. மஞ்சள் என்ற பெயரில் மருத்துவம் இருக்கிறது மங்கலம் இருக்கிறது நிறம் இருக்கிறது ஆனால் இன்றைய பெயர்களில் ஒளி மட்டுமே இருக்கிறது வாழ்வு இல்லை என்று பண்பாட்டை மறந்து பெயரில் அந்நிய மோதல் ஆகிவிட்டோம். என்கிறார்.

பழைய தமிழ் பெயர்கள் எல்லாம் பொருள் உள்ளவை. உப்பு, புளி, மிளகாய், மஞ்சள், கருப்பன், வெள்ளையன், ஆண்டி, கிழவன் என இவையெல்லாம் வாழ்வோடு இணைந்தவை. பிற்காலத்தில் வடமொழிப் பெயர்கள் வந்தபோது இபாபெயர்கள் பொருள் இழந்தன. எனவே நமது பண்பாட்டு அறிவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியமானதாக அமைகிறது.

## மருத்துவத்தில் மஞ்சள்

மருத்துவத்தில் முதலிடம் பெறுவது மஞ்சளாகும். பிள்ளை பெற்ற பெண்ணுக்கு மஞ்சள் கசாயம் கொடுப்பது கிருமி நாசினியாகவும் உடல் வெப்பத்தை சீராக்கும் செய்யும் மரபு முறையாகும். அம்மை நோய் கண்டு மீண்டவர்களை முதற் குளியலில் மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்து கலவையாக தேய்த்து குளிப்பாட்டுகின்றனர் பத்து இருபது நாட்கள் குளிக்காத அந்த உடலில் எழுகின்ற நாற்றம் இந்த கலவையால் நீக்கப்படுகிறது. இவ்வாறு மருத்துவத்தில் முக்கிய பங்காற்றக் கூடியதாக மஞ்சள் பண்பாடு அமைகிறது.

## தாய் தெய்வ வழிபாட்டில் மஞ்சள்

கிராம தேவதைகள் மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் மஞ்சள் அபிஷேகம், மஞ்சள் காப்பு, மஞ்சள் நீராட்டு ஆகியவை இன்றும் நடக்கின்றன. சிறு தெய்வங்களுக்கு மஞ்சள் என்றும் பெரும் தெய்வங்களுக்கு குங்குமம் என்றும் பிரிவு, பண்பாட்டு அதிகார மாற்றத்தின் குறியீடு என்கிறார் தொ. ப. மஞ்சள் பூசிய பானை மஞ்சள் கலந்த அரிசி ஆகியவை சடங்கின் தூய்மைக்கு அடையாளமாக அமைகின்றன. தமிழரின் தாய்தா தெய்வ வழிபாட்டில் மஞ்சள் முதன்மையாக இன்று வரை நிலைத்து நிற்கின்றது. தென் தமிழகத்தில் மஞ்சள் குடும்பம் என்று குலப்பெயர் உண்டு . உப்பு விற்றவன் உப்பிலியன்

என்றும் என்னை ஆட்டியவன் செக்கான் என்று அழைக்கப்பட்டதை போன்று மஞ்சள் விவசாயம் செய்பவர்கள் மஞ்சள் விற்பவர்கள் அந்தப் பெயரைப் பெற்றனர் இது இன்றளவும் தமிழர் பண்பாட்டின் எச்சமாக இருக்கிறது.

## முடிவுகள்

பண்பாடு என்பதை அது மீறப்படுகிற போது உணர்கிறோம். இன்னொரு கட்டமாக தேவைப்படுகிற போதும் பண்பாட்டை உணர்கிறோம். அந்த அடிப்படையில் மஞ்சள் என்பது தமிழர் வாழ்வில் நீங்கா இடம் பிடித்த ஒன்று.

குழந்தையை காக்கும் மருத்துவ நம்பிக்கையாக இது இருந்து வருகிறது பெண்ணை சமூகத்தில் அடையாளப்படுத்தும் சடங்குகளாக விளங்குகிறது தமிழரின் பொருள் பொதிந்த பெயரின் மரபின் எச்சமாக காணப்படுகிறது.

மஞ்சள் என்பது பெண் உணவு மருத்துவம் வழிபாடு வேளாண்மை ஆகிய ஐந்தையும் இணைக்கும் பண்பாட்டுப் பொருளாக அமைகிறது.

மொத்தத்தில் நாம் ஒரு பொருட்டாக கருதாத சிறு பொருளான மஞ்சளில் தமிழரின் 2000 ஆண்டு பண்பாட்டு அடையாளம் படிந்து கிடப்பதை தொ. ப எழுத்து வழி அறிய முடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொ. பரமசிவன், மஞ்சள் மகிமை காலச்சுவடு பதிப்பகம் சென்னை
2. ஆர். பாலசுப்பிரமணியன், இந்திய பண்பாடு தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம் சென்னை 1981
3. பண்பாடு சமூக கலை இலக்கிய ஆய்வு சஞ்சிகை இந்து சமய கலாச்சார அலுவல்கள், திணைக்களம் 2009

© 2026 முனைவர் . வைடூரியம்மாள் பா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..